# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>கல்வி மற்றும் திறன் விருத்தி பயிற்சிகளில் அதிக ஒத்துழைப்பைப்பேண ITEC தின கொண்டாட்டங்களில் இந்தியா - இலங்கை உறுதி</u>

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் - ITEC - ஊடாக இந்தியா இலங்கை இடையிலான 60 வருட திறன் விருத்தி பங்குடைமையினைக் கொண்டாடும் முகமாக 2025 பெப்ரவரி 05ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் 2025 ITEC தினம் கொண்டாடப்பட்டது.

2. உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் வெளியுறவு ,வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறைகளின் பிரதி அமைச்சர் கௌரவ அருண் ஹேமச்சந்திரா ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். ITEC திட்டங்களின் கீழ் இந்தியாவில் பல்வேறு பயிற்சி திட்டங்களில் பங்குபற்றிய இலங்கையைச் சேர்ந்த வல்லுநர்கள், ITEC முன்னாள் மாணவர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

3. இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய கௌரவ அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா அவர்கள், ITEC முன்முயற்சியானது அறிவுப் பகிர்வுக்கான ஒரு வழியாக மட்டுமல்லாமல், வரலாற்று, கலாசார மற்றும் பொருளாதார உறவுகளில் கட்டியெழுப்பப்பட்ட உறிதியான இருதரப்பு உறவுகளை வலுவாக்கும் பாலமாகவும் செயல்படுவதாக பாராட்டினார். நட்பு நாடுகளுக்கான திறன் மேம்பாடு, அறிவுப் பகிர்வு மற்றும் ஆளுமை விருத்தியில் கவனம் செலுத்தும் ITEC திட்டத்தின் மூலம் சர்வதேச ஒத்துழைப்புக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையின் நிபுணர்களை வலுவூட்டுவதிலும் பொது சேவை திறன்களை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் ITEC திட்டத்தின் மூலம் இந்திய அரசு இலங்கைக்கு அளித்துவருகின்ற அசைக்க முடியாத ஆதரவிற்கு அவர் இதயபூர்வமான நன்றியையும் தெரிவித்தார். மேலும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் ITEC முன்னாள் மாணவர்களின் வழங்கிவரும் பங்களிப்புகளையும் அவர் மெச்சியிருந்தார்.

4. இந்நிகழ்வில் உரையாற்றிய உயர் ஸ்தானிகர் அவர்கள், ITEC திட்டத்தின்மீது கடந்த பல வருடங்களாக இலங்கை அதிகாரிகள் காண்பித்துவரும் பேரார்வத்தை குறிப்பிட்டிருந்தார். இரு நாடுகளிலும் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான பங்குடைமை மூலம் உயர் கல்வித் துறை உட்பட இலங்கையின் கல்வித் துறையை

ஆதரிப்பதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பினை அவர் இங்கு வலியுறுத்தினார். அத்துடன், தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் 402 ITEC ஆசனங்களுக்கு மேலதிகமாக, இந்தியாவில் உள்ள தேசிய நல்லாட்சி மையத்தில் (NGGC) 1500 இலங்கை அதிகாரிகள் பயிற்சி பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். 'வசுதைவ குடும்பகம்' (உலகம் ஒரு குடும்பம்) எனும் தத்துவத்தால் வழிநடத்தப்படும் இந்தியா, இலங்கைக்கான திறன் விருத்தி முயற்சிகளில் தொடர்ந்து முன்னணி வகிபாகத்தைக் கொண்டிருக்கும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

5. இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த சிரேஸ்ட அதிகாரிகள், இந்தியாவில் ITEC பயிற்சியில் கலந்துகொண்டபோது தமக்கு கிடைக்கப்பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும் திட்டத்தின் விரிவான மற்றும் பல்துறை அணுகுமுறைக்கு உயரிய பாராட்டுகளையும் தெரிவித்தனர். செயற்திறன் மிக்க ஆட்சி, காலநிலை மாற்றம், புதுப்பிக்கத் தக்க சக்தி, டிஜிட்டல் மயமாக்கல், ஆரம்ப நிலை சூழல் கட்டமைப்பு முறைமைகள், ஆட்சியில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, இணையப்பாதுகாப்பு, தரவு மேலாண்மை, குவாண்டக் கணினியியல், தகவல் விஞ்ஞானம், புத்தாக்க வலுவூட்டல், வர்த்தக நிறுவனங்களை ஸ்தாபித்தல் மற்றும் தொழில்வாண்மை உள்ளிட்ட துறைகளில் வழங்கப்பட்ட பயிற்சிகளையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்த திட்டங்கள் பங்கேற்பாளர்களுக்கு பெறுமதியான நுண்ணறிவுகள் மற்றும் நடைமுறை ரீதியான திறன்களை வழங்கியுள்ளன, இதனால் அவர்கள் முன்னேற்றத்தை இயக்கவும் அந்தந்த துறைகளில் வினைத்திறனுடன் பங்களிக்கவும் முடியும்.

6. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் திறனை மேம்படுத்துவதற்காகவும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காகவும் 1964 செப்டெம்பரில் ஸ்தாபிக்கப்பட்ட ITEC நிகழ்ச்சித் திட்டமானது இந்திய அரசாங்கத்தின் முன்னோடியான திட்டமாகும். அபிவிருத்தி அடைந்துவரும் சக 160 நாடுகளைச் சேர்ந்த 200,000 க்கும் மேற்பட்டோர் இந்த திட்டத்தில் பங்கேற்றுள்ளதால், நட்பு நாடுகளின் மனித வள மேம்பாட்டிற்கான இந்தியாவின் பங்களிப்பிற்கான முக்கியமான சக்தியாக இது உருவெடுத்துள்ளது. ITEC திட்டத்திற்காக இலங்கைக்கு தற்போது வருடாந்தம் 500 பயிற்சி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தெற்குலக ஒத்துழைப்பின் இந்த தனித்துவமான முயற்சியைக் குறிக்கும் வகையில் உலகெங்கிலும் உள்ள இந்திய தூதரகங்களால் ஒவ்வொரு ஆண்டும் ‘ITEC தினம்’ கொண்டாடப்படுகிறது.

*****

**கொழும்பு**
**07 பெப்ரவரி 2025**